# மனம் நெகிழ்ந்த நினைவாஞ்சலி
# திருமதி தேவராணி செல்வராசா
## (எங்கள் "ராணி அக்கா")

இலங்கை - ஜெர்மனி - கனடா வாழ் தாய் மாமன் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி யோகேஸ்வரி அவர்களின் பிள்ளைகள் குடும்பத்தினர்களின் உள்ளக்குமுறள்களும் ஆழ்ந்த அனுதாபங்களும்.

எங்கள் அனைவருக்கும் மச்சாளாய் இருப்பினும் நாம் அனைவரும் செல்லமாக அன்பாக "ராணி அக்கா" என்றே இன்றுவரை அழைத்து வந்தோம். எங்கள் இளமைக்காலங்களில் நாங்கள் விடுமுறைக்கு கொழும்பில் இருந்து கொக்குவில் சென்ற சமயங்களில் பாசத்தோடு அரவணைத்து தின்பண்டங்கள் தந்து உணவு பரிமாறி இன்பமாக விளையாட்டாக கழித்தநாட்களை மீண்டும் நினைவு படுத்திப்பார்க்கையில் உள்ளம் நெகிழ்கிறது. எந்த சந்தர்பங்களிலும் கோபத்துடன் பேசாமல் மிகவும் ஆறுதலாக புன்சிரிப்புடனும் வாஞ்சையுடனும் தாய் மாமன் பிள்ளைகள் என்று எங்களை அணைத்து சிறு நற்புத்திமதிகள் கூறியும் எங்கள் விடுமுறைநாட்களை மகிழ்ச்சியாக கழித்த நாட்கள் எங்கே மறைந்துபோகும் "ராணி அக்கா"? மணம்முடித்து நீங்களும் செல்வராசா அண்ணனும் கொக்குவிலில் வாழ்ந்த காலங்களிலும் பரம்பரை கதைகளும் சரித்திரங்களும் கூறிய எத்தனை எத்தனை நினைவுகள். கனடாவில் ஜெர்மனியில் குடிபெயர்ந்த காலங்களிலும் எங்களுடன் அன்பாக தொலைபேசியில் அளவளாவி கழித்த நாட்கள் எத்தனை எத்தனை. எம்மில் யாராவது தாயகம் வந்த சமயங்களில் கூட எம் தாயகத்தில் எங்களைப் பார்த்துவந்த மகிழ்சியான நாட்களை எண்ணிப்பார்க்கிறோம்.

1978 ஆம் ஆண்டு காலங்களிலும் பின்பு சமீபத்தில் 2017 ஆண்டு காலங்களிலும் கூட என் (ரவி-யோகா) வாகனத்தில் எம்முடனேயே இலங்கையில் சில இடங்களுக்கு சொந்த சகோதரி போல் என் குடும்பத்துடன் சேர்ந்து களித்த விடுமுறை காலங்கள் மீண்டும் வராத என எண்ணுகையில் மனம் சோர்ந்து போகிறது ராணி அக்கா. இதேபோல் என் உடன் பிறப்புக்கள் மகேந்து, யோகன் - பாலா, குணா, விஜயா, நிரஞ்சலா, தேவா, சசியும் தங்கள் விடுமுறையின் போது தாயகத்தில் உங்களுடன் கழித்த நாட்களை கூறி மகிழ்ந்தவர்கள் இன்று மிகவும் கவலையுடன் மனம் நெகிழ்ந்து இருக்கிறார்கள்.

என் மனைவி யோகாவை நான் கொக்குவிலில் விட்டு விட்டு வேலை நிமித்தம் பிறநாடு சென்ற சமயத்தில் உங்கள் அயலில் வசித்து வந்த என் மனைவி யோகாவை உடன் பிறந்த சகோதரி போல் தினம் தினம் ஒன்றாகத் திரிந்து கண்காணித்து மகப்பேறு காலங்களிலும் என் வருகைக்கு முன்பு மிகுந்த அரவனைப்புடன் பாசமாய் பார்த்து வந்த காலங்களை எண்ணி என் மனைவி யோகா உங்கள் இழப்பு செய்தி கேட்டதும் கண்ணிருடன் உங்கள் உறவுகளுடன் தொலைபேசியில் கதைத்தது என் (ரவி) மனதை நெகிழ வைத்தது. இதே போன்று என் உடன் பிறப்புக்கள் அவர்களின் குடும்பத்தினரின் உங்களைப் பற்றிய சொந்தக் கதைகள் உள்ளன ராணி அக்கா.

உங்கள் தாய்மாமன் மாமி (எங்கள் பெற்றோர்கள்) நீங்கள் கொழும்பு வந்த காலங்களில் தங்கள் சொந்த மருமகளாய் உங்களைப் பார்த்து வந்த எங்கள் இளமைக் காலங்களையும் மீண்டும் மனதில் நினைக்கையில் இந்த பாடல்தான் நினைவில் வருகிறது ராணி அக்கா........"சின்னஞ் சிறு வயதுமுதல் சேர்ந்து நாம் பழகி வந்தோம்........ இப்போ நாம் பிரிந்து நிற்கிறோமே அன்பு மச்சாளே – ராணி அக்கா! எங்கள் எல்லோருக்கும் ஒரு அன்பு அக்காவாய் மாமன் பிள்ளைகள் என்று வாழ்ந்த காலங்களில் எத்தனை பரிவும் பாசமுமாய் இருந்தீர்கள் ராணி அக்கா.

சமீபத்தில் உடல் நலம் குன்றி மருத்துவ மனையில் படுத்த படுக்கையாய் இருக்கையில் எங்கள் மனதில் ஏற்பட்ட மனத்தாங்கல்களை சொல்ல வார்த்தைகள் இல்லை. காலனின் நாட்குறிப்பில் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி ஏன் வந்ததோ நாம் அறியோம். ஒருவேளை உங்கள் முன் சென்ற எங்கள் ஆசை "கொக்குவில் மாமா மாமி" (உங்கள் பெற்றோர்) நீங்களும் விரைவில் சுவர்க்கத்தில் நேரில் சந்திக்கவேண்டும் என பிராப்தம் இருந்ததோ என நாம் எம்மை தேற்றிக்கொள்கிறோம். எங்கள் "ராணி அக்கா" எங்கள் மனதினில் நீங்கள் என்றென்றும் நிலைத்திருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் சகோதர சகோதரிகளின் பிள்கைளை உங்கள் மக்களைப்போல் கண்ணும் கருத்துமாய் பார்த்து நலமே சகல வைபவங்களிலும் கலந்து சிறப்பித்து திருப்தி கண்டவர் நீங்கள். அதேபோல் தன் சின்னையா சின்னம்மா தாய்மாமன் பிள்ளைகளிலும் அன்பு செலுத்தி ஆதரவாக இருந்தவர். பிறந்த பூர்வீக ஊராகிய கொக்குவில் கிழக்கில் உங்கள் சகோதரி பிள்ளைகள் குடும்பத்துடன் தன் இறுதி நாள் வரை களித்து உங்கள் கணவர் பெறாமக்கள் புடைசூழ நிம்மதியாக கண்ணை மூடிய தெய்வமாகிவிட்டீர்கள்.

உங்கள் இழப்பு எம் எல்லோருக்கும் மனவேதனையை தருகிறதே அன்பு ராணி அக்காவே! உங்கள் தாய் மாமன் பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கிறோம்.

கனடா – ஜெர்மனி - இலங்கை
இரவீந்திமூர்த்தி-யோகேஸ்வரி, மகேந்திரமூர்த்தி, யோகேந்திரன்-கமலேஸ்வரி, பாலேந்திரன்-கேதீஸ்வரி, குனேந்திரன்-மீனலோஜினி, விஜேந்திரன்-கோனேஸ்வரி, நிரஞ்சலா, தெய்வேந்திரன் - ரோகினி, சசிகலா-ஜெயாநந்தன்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**எம் குடும்ப இணையத்தள இணைப்பில் உங்கள் பதிவு உள்ளது கீழே பார்க்கவும்**

http://suntharamoorthyfamily.freeservers.com/Rani%20Akka%20Souvenir%2015Feb%2021.pdf